1991 செப்டம்பர் 19]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்றைக்கு 90க்கு மேற்பட்ட சதவிகித மக்கள் நம்முடைய ஒப்பற்ற தலைவியாக புரட்சித் தலைவி அவர்களை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் உறுதியாக சில கருத்துக்களைப் போக்குவரத்துக் கழகங்களுக்கு அறிவுரையாக வழங்கியிருக்கிறார்கள். அந்த அறிவுரைகளை ஏற்று, 'உண்மையைச் சொல் உறுதியுடன் சொல், இறுதிவரை சொல்' என்ற தத்துவத்தை நிறைவேற்றுகின்ற வகையில், போக்குவரத்துக் கழகங்கள் ஓராண்டிற்குள் உங்கள் குறைகள் அனைத்தையும் களையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 60, திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு வனம் மற்றும் மீனவளத்துறை அமைச்சர்.

60—

புதுப்பேட்டையில் கால்நடை மருத்துவமனை

*1504. திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு வனம் மற்றும் மீனவளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் ஆத்தூர் நகரம் புதுப்பேட்டை பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைய நிலையில் இதற்கு திட்டம் இல்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் ஆத்தூர் தொகுதி புதுப்பேட்டையைச் சேர்ந்த கல்லாநத்தம், துளுக்களூர் மற்றும் முல்லைவாடி, சந்தனகிரி, முட்டல் போன்ற ஊர்களில் 20,000-க்கு மேற்பட்ட கால்நடைகள் உள்ளதாலும், 7-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளதாலும், இப்பகுதியில் 15 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருப்பதாலும் வருகின்ற நிதி ஆண்டிலேயாவது இங்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைக்கப்படுமா என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே உள்ள மருந்தகங்கள் ஆத்தூர், மல்லிகரை, மஞ்சினி, கால்நடை கிளை நிலையங்கள் மொத்தம் இருப்பது 4.

இந்த நான்கு பகுதிகள் கல்பாளுர், அய்யனார் பாளையம், கீரிப்பட்டி, அம்மாபாளையம். இதைத்தவிர மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று இதயதெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியில் அடுத்த நிதியாண்டில் இதைப் பரிசீலிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் கோழிப் பண்ணைகள் மிக அதிக அளவில் இருப்பதாலும் கிராமங்களில் சில சமயங்களில் கால்நடைகள் எழுந்து நடக்க முடியாத அளவுக்கு நோயால் தாக்கப்பட்டு இருக்கும்போது அவை இருக்கும் இடத்திலேயே டாக்டர்கள் சென்று பார்த்து சிகிச்சை அளிக்கும் வகையில் நடமாடும் கால்நடை மருந்தகங்கள் அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன். என்னுடைய தொகுதியான பெரிய கல்ராயன் மலை மலைவாழ் மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதியாகும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சம்பந்தப்பட்ட கேள்வியாக இருக்கவேண்டும். இன்னொரு ஊர் பற்றிக் கேட்டால் அவரிடத்திலே விளக்கம் இருக்காது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதற்கான பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவமனை அமைக்கும்போது அந்தப் பகுதியிலே 10,000 கால்நடைகள் இருந்தால் அமைக்கலாம் என்ற ஒரு கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு சொன்னார்கள். தூரத்தை அதிகம் எடுத்துக்கொள்வதா அல்லது கால்நடைகள் அதிகம் இருப்பதை எடுத்துக்கொள்வதா என்பதைப் பொறுத்த வரையில் இருக்கின்ற விதியைத் தளர்த்தி தூரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய வேளாண்மைக் குழு நிர்ணயித்தது 10,000 கால்நடைகள் இருக்கும் பகுதிகளுக்குக் கட்டாயம் மருத்துவமனை இருக்க வேண்டும் என்பது. அதே நேரத்தில் அங்கு ஏற்கனவே மருத்துவமனை இருந்தது என்றால் அதிகமான கால்நடைகள் இருக்கும் பட்சத்தில்

1991 செப்டம்பர் 19]

அங்கே கால்நடை மருத்துவமனை துவக்கப்படும் கிராமத்திற்கும் ஏற்கனவே உள்ள கால்நடை மருந்தகங்களுக்கும் இடையே உள்ள தூரம் மற்றும் கால்நடைகளின் எண்ணிக்கை இவைகளைக் கருத்தில் கொண்டுதான் புதிய நிலையங்கள் அமைக்கப் படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. பழனிசாமி.

திரு. இரா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கால்நடை மருத்துவமனை அமைக்கப்பட இருக்கிற இடங்களில் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ஒரு கணிசமான தொகையை வழங்கினால்தான் மீதித் தொகையை அரசு அளித்து கால்நடை மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது. பொதுவாக ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் பணம் இல்லாத நிலையில் பல கால்நடை மருத்துவமனைகளை கட்ட முடியாத நிலை உள்ளது. எனவே அரசு முழு மானியம் கொடுத்து கால்நடை மருத்துவமனை கட்ட முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் பரிவுடன் பரிசீலிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. தகவல் கோரல்.

நிலக்கோட்டை தொகுதி அம்மைய நாயக்கனூர் பேரூராட்சிக்குரிய பகுதிகளில் குடிநீர் வழங்குவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் எவ்வளவோ காரியங்கள் செய்தாலும் கூட குடிநீர்ப் பிரச்சினை மிக மிக மோசமாக இருக்கிற காரணத்தால் என்னுடைய தொகுதியில் நாளைய தினம் என்னுடைய தலைமையிலே மறியல் செய்யவேண்டும் என்று நோட்டீஸ் எல்லாம் அடித்து அம்மையநாயக்கனூர் பேரூ